


Our Chezhumai is given to the Small Groups in bilingual format (English and Tamil)

எங்களது செழுமை மாத இதழ் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறுகுழுக்களுக்கு கொடுக்கப்படுகிறது



We have a mighty task before us. The earth needs our assistance - Plant Trees

நம் முன்னே மிகப்பெரிய கடமை ஒன்று உள்ளது. பூமி நம் உதவியை நாடுகிறது. நிறைய மரங்களை வளர்க்க வேண்டும்.

## Good best practices to learn from this month Chezhumai

- Apart from trees and conservative farming other activities like earthworm manure production, poultry farming for egg & meat, duck & other small bird keeping, beekeeping, silkworm production and breeding fish, can be done to in the land to get additional income.
- By planting fruit bearing trees, income can be generated from fruit business
- Improve the soil condition by using natural manure
- Avoiding chemical fertilizer
- Planting multiple tree species
- Planting trees with good spacing and practicing intercrops in between the trees
- Participating in TIST Node meeting, learning the best practices from the Node and practicing the same

**TIST Tree Planting India Private Limited**
19/8, Lake View Road, Kottur, Chennai 600085
Phone: 044 42188438 / Mobile: 9840299822 /
Email: josephrexon@tist.org / Visit us at www.tist.org

# இம்மாத செழுமையின் மூலம் கற்றுக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய பயிற்சி முறைகள்

- மரம் மற்றும் விவசாயத்தை தவிர நிலத்தில் மற்ற தொழில்களான மண்புழு உரம் தயாரித்தல், முட்டை மற்றும் இறைச்சிகாக கோழி வளர்த்தல், வாத்து போன்ற பறவைகளை வளர்த்தல், தேனீ வளர்த்தல், பட்டுப்பூச்சி மற்றும் மீன் வளர்த்தல் போன்றவைகளை செய்து கூடுதல் வருமானம் பெறுவது.
- பழவகை மரங்களை நடவு செய்து விரைவில் பழவியாபாரத்தின் மூலம் கூடுதல் வருமானம் பெறுவது
- இயற்கை உரம் கொண்டு மண்வளத்தை கூட்டுவது.
- இராசாயண உரத்தை தவிர்ப்பது
- பலவிதமான மரங்களை நடவு செய்வது
- நல்ல இடைவெளி விட்டு மரங்களை நட்டு அதன் இடையில் தொடர்ந்து ஊடுபயிர் செய்வது.
- TIST யின் கணுக்கூட்டத்தில் தவறாமல் பங்கேற்று அதில் கற்கும் சிறப்பு பயிற்சி முறைகளை கடைப்பிடிப்பது.




TIST Training and Node meeting
TIST- ன் பயிற்சி மற்றும் நோட கூட்டம்

## Apart from trees and conservative farming what else can be done in your land to get additional income?

One of the best practices is earthworm manure production, poultry farming for egg & meat, duck & other small bird keeping, beekeeping, silkworm production and breeding fish, any of these activities when carried out in your land you will get good income. Definitely, to following these activities you need good training and information. Meet your TIST Coordinator in the Node meetings and ask him for required training to carry out such good activities, he will definitely help you.

Planting trees is a good practice. Planting useful trees will give you several benefits. The writeup on Sapota trees is given in Tamil. Anyone interested to have the same in English, please email to josephrexon@tist.org.

## மரங்களை மற்றும் சிறந்த முறை விவசாயத்தை தவிர உங்கள் நிலங்களில் என்ன நல்ல காரியங்கள் செய்யலாம், கூடுதல் வருமானம் பெற ?

நல்ல செயல் முறைகளான மண்புழு உரம் தயாரித்தல், முட்டை மற்றும் இறைச்சிகாக கோழி வளர்த்தல், வாத்து போன்ற பறவைகளை வளர்த்தல், தேனீ வளர்த்தல், பட்டுப்பூச்சி மற்றும் மீன் வளர்த்தல் போன்றவை கூடுதல் வருமானத்தை உங்களுக்கு பெற்று தரும். கண்டிப்பாக இந்த நல்ல முறைகளை ஆரம்பிப்பதற்கு நல்ல பயிற்சி மற்றும் விவரங்கள் தேவைப்படும். ஆர்வம் உள்ள குழுக்கள் உங்களது TIST பயிற்சியாளரை கணுக்கூட்டங்களில் சந்தித்து மேலே கூறிப்பிட்டுள்ள நல்ல காரியங்களை தொடங்குவதற்கு தேவையான பயிற்சி மற்றும் விவரம் தேவை என்று கேளுங்கள். அவர் உங்களுக்கு தேவையான உதவி அளிப்பார்.

மரம் நடவு செய்வது நல்ல ஒரு செயல் ஆகும், அதுவே பலன் தரும் மரங்களை நடவு செய்தால் இரட்டிப்பு நன்மை தரும். கீழே வரும் சப்போட்டா கனி மரம் சாகுபடி முறை தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது, இதை ஆங்கிலத்தில் பெற விருப்பம் உள்ளவர் josephrexon@tist.org மின்னஞ்சலுக்கு எழுதவும்.

## சப்போட்டா

சப்போட்டா பயிறு எந்த மண் வகை மண்ணிலும் செழித்து வளரக் கூடியது. நல்ல வடிகால் வசதியான மண் ஏற்றது. ஆழமான வண்டல் மண் கலந்த நிலங்கள் மிகவும் உகந்தது. சப்போட்டா ஓரளவு உப்புத் தன்மையுள்ள நிலங்களிலும் உப்புத் தன்மை கொண்ட நீரையும் தாங்கி வளரக்கூடியது. சப்போட்டா பருவக்காலம் ஜீலை ஆகஸ்ட்.

### செடிகள் நடுதல்

சப்போட்டா பயிரிட 8 மீட்டருக்கு 8 மீட்டர் இடைவெளியில் 60 செ.மீ. நீளம், அகலம், 60 செ.மீ. ஆழம் என்ற அளவில் குழிகள் எடுக்கப்பட வேண்டும். குழிகளை சிறது நாட்களுக்கு ஆறவிடவும், 10 கிலோ மக்கிய தொழு உரம், ஒரு கிலோ, வேப்பம் புண்ணாக்கு, 10 கிராம் லிண்டேன் (1.3 சதவிகிதம் என்ற அளவில்) மற்றும் மேல் மண் காலங்களிலேயே செடிகள் நடப்படுதல் வேண்டும். கூடிசடிகள் நட்ட உடன், செடிகளுக்கு இருபுறமும் குச்சிகள் வைத்துக் கட்டுவதன் மூலம் காற்றில் செடிகள் ஆடிச் சேதமடைவதைத் தவிர்க்க வேண்டும்.

முகரந்தச் சேர்க்கை நல்ல முறையில் நடைபெற்ற, காய்கள் அதிகம் பிடிக்க, குறைந்த பட்சம் 2 அல்லது 3 மரங்கள் இருக்குமாறு பார்த்து நடவும். செடிகள் நட்ட சிறிது நாட்களுக்கு, 2 முதல் 3 நாட்களுக்கு ஒரு முறை பின்னர் 4 முதல் 5 நாட்களுக்கு ஒரு முறை என்ற அளவிலும் நீர் ஊற்ற வேண்டும். ஒரு வருடத்திற்குப் பிறகு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை என்ற அளவில் நீர் பாய்ச்சலாம். இப்பயிர் சிறந்த முறையில் வறட்சியைத் தாங்குவதால், மானாவாரிப் பயிராகவே பயிர் செய்யலாம்.

சாதாரணமாக செடிகள் நடும்போது இரசாயன உரம் எதுவும் இட வேண்டியதில்லை, ஒரு வயது முடிந்தபின், செடி ஒன்றுக்கு 200 கிராம் தழைச்சத்து, 200 கிராம் மணிச்சத்து மற்றும் 300 கிராம் சாம்பல் சத்து என்ற அளவிலும், இதையே வருடம் ஒன்றுக்கு 200:200:300 கிராம் என்ற அளவில் கூட்டி, 5 வருடங்களுக்கப் பிறகு, 1 கிலோ தழைச்சத்து, 1 கிலோ மணிச்சத்து மற்றும் 1.5 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் இட வேண்டும். மக்கிய தொழு உரம் ஒரு செடிக்கு 30 முதல் 50 கிலோ என்ற அளவில் இடுவது நல்லது.

மேற்படி உர அளவை, நீர்ப்பாசன வசதி உள்ள பகுதிகளில் கோடை காலத்தில் ஒரு முறையும், மழைக்காலத்தில் ஒரு முறையும் என இரண்டாகப் பிரித்து இடலாம். இதன் மூலம் செடிகளின் வளர்ச்சி சீராக இருபப்தோடு, உர சேதாரமும் தடுக்கப்படும்.

**களை கட்டுப்பாடு மற்றும் பின்செய் நேர்த்தி**

- ஒட்டுப் பகுதிகளின் கீழே தழைத்து வரும் வேர்ச் செடியின் தளிர்களை அவ்வப்போது அகற்ற வேண்டும்.
- தரை மட்டத்திலிருந்து சுமார் 2 அடி உயரம் வரை கிளைகள் எதுவும் பிரியாமல் பார்த்துக் கொள்வது நல்லது. கிளைகள் மரத்தில் சீராகப் பரவி இருக்க வேண்டும்
- சப்போட்டா மரத்திற்கு கவாத்து செய்தல் தேவை இல்லை. ஊயரமாக வளரக் கூடிய ஒரு சில தண்டுகளை மட்டும் நீக்கிவிட வேண்டும். அடர்த்தியான, நிழல் விழும் கிளைகளையும் நீக்கி விடவும்.

## What to do to get good yield from fruit bearing trees?

- All the trees should be healthy to give good fruits
- Trees should be protected from disease and insects
- Trees should get good sunshine to yield well
- Trees should be planted with good spacing so that the root system grows well
- Unwanted branches should be trimmed. Too much trimming of side branches would enhance the vertical growth of the trees, this will reduce the flowering capacity and the yield reduces

## பழவகை மரங்களில் இருந்து நல்ல மகசூல் பேற?

- மரங்கள் ஆரோகியமாக இருக்க வேண்டும் நல்ல கனி தருவதற்கு
- மரங்களை நோய்கள் மற்றும் பூச்சிகள் இடம் இருந்து காப்பாற்றவும்
- மரங்களுக்கு சூரிய ஒளி தேவை நல்ல கனி தருவதற்கு
- மரங்களை நல்ல இடைவெளி விட்டு நட்டால் மரத்தின் வேர்கள் நல்ல முறையில் வளர்வதற்க்கு இடம் உண்டு.
- தேவையற்ற களைகளை அகற்றுவது நல்ல முறையாகும். அதே நேரத்தில் அளவுக்கு அதிகமான களைகளை அகற்றுவது மரத்தை மேல் நோக்கி வளர்வதற்கு வழிவகிக்கும், இதனால் பூபூக்கும் தன்மை குறைந்து விடும், மகசூலும் குறையும்.

## Indian Small Group of Arani Centern

The members of this small group are following the best practices of TIST at Mambakkam Village at Arani Center. They have planted teak, kumil and neam trees in their 4 acre land and maintaining it in good condition. They have split their land into 5 groves, in which, Kamalakkanan grove has 200 trees, Meenachisundaram 300, Palani 250, Punniyakotti 300 and in Rajan grove there are 75 trees. All totally they have 1125 trees in their groves. All the trees are planted with good spacing of 10 x 8 feet. The members of this group have received 6 months incentive from TIST for all their live trees. The members say that, "we participate in all the TIST meetings and learn all the best practices provided in the meetings, and at the same time, we also share our experience with other group members in the meeting". They are regularly practicing intercrops too. The members use natural manure like cowdung & dry leaves to increase the quality of their land soil and than practice intercrops.

## ஆரணி மையத்தின் இந்தியன் சிறுகுழு

ஆரணி மையத்தில் மாம்பாக்கம் என்ற கிராமத்தில் இக்குழு உறுப்பினர்கள் **TIST**–ன் திட்டத்தின் சிறந்த செயல்முறைகளை கடைபிடித்து வருகிறார்கள். அவர்கள் 4 ஏக்கர் நிலப்பரப்பில் தேக்கு, குமிழ், வேம்பு போன்ற மரங்களை நடவு செய்து நல்ல முறையில் பராமரித்து வருகிறார்கள். அவர்கள் நிலங்கள் 5 தோட்டங்களாக உள்ளது, இதில் கமலக்கண்ணன் தோப்பில் 200, மீனாட்சிசுந்தரம் 300, பழனி 250, புண்ணியகோட்டி 300, ராஜன் தோப்பில் 75, மொத்தம் 1125 மரக்கன்றுகள் உள்ளன. அம்மரங்களை 10 x 8 என்ற அடி கணக்கில் நடவு செய்துள்ளனர். இதுவரை இக்குழு உறுப்பினர்கள் TIST திட்டத்திடமிருந்து 6 மாதத்திற்கான ஊக்கத்தொகையை பெற்றுள்ளனர். இக்குழு உறுப்பினர்கள் கூறுவது, "நாங்கள் தவறாமல் கணுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தில் பயிற்சியளிக்கப்படும் எல்லா சிறந்த பயிற்சிகளையும் கற்றுக்கொள்கிறோம். அதே நேரத்தில், எங்களுக்கு தெரிந்த நல்ல செயல்பாடுகளையும் கூட்டத்திற்கு வருகின்ற அனைத்து குழு உறுப்பினர்களிடைய பகிர்ந்து கொள்கிறோம்". இக்குழு உறுப்பினர்கள் தவறாமல் ஊடுபயிரும் செய்து வருகிறார்கள். நிலத்தின் மண்ணை பிரட்டி இயற்கை உரமான மாட்டுசாணம், காய்ந்த இலைகள் போன்றவற்றை கொண்டு மண்வளத்தை கூட்டி பிறகு ஊடுபயிர் செய்து வருகின்றனர் இக்குழு உறுப்பினர்கள்.





Members of Indian small group all happy in their grove
இந்தியன் சிறுகுழு உறுப்பினர்கள் அவர்களது மரத்தோப்பில் மகிழ்ச்சியாக காணப்படுகின்றனர்

## Thinagaran Small Group of Thiruthani Center

The members of this small group are following the best practices of TIST at Thirumalrajpet village in Thiruthani Center. They have 3 tree groves with them. There are 1088 trees in Elumalai grove, in Elumalai1 165 and in Elumalai2 there are 260 trees, all totally 1513 trees are there with this group. To get additional income, they are practicing groundnut regularly. By participating in all the training program in TIST meeting, they learn new best practices and maintain their trees in good condition. They use natural manure for their groves. The members grow a plant called Janapai in their groves. When the Janapai plants are 4 feet height, they plough the soil. The Janapai plants gets mixed with the soil and dries, this gives good nourishment to the soil. The members are encouraging other farmers by telling them about TIST Program.

## திருத்தனி மையத்தின் தினகரன் சிறுகுழு

திருத்தனி மையத்தில் திருமால்ராஜிப்பேட்டை கிராமத்தில் தினகரன் சிறுகுழு உறுப்பினர்கள் TIST–ன் திட்டத்தை அறிந்து TIST–ல் சிறுகுழுவாக இணைந்தனர். இந்த சிறுகுழுவிடம் 3 மரத்தோப்புகள் உள்ளன. ஏழுமலை தோப்பில் 1088, ஏழுமலை1 165, ஏழுமலை2 தோப்பில் 260, மொத்தம் 1513 மரங்கள் உள்ளன. இச்சிறுகுழு உறுப்பினர்கள் கூடுதல் வருமானம் பெறுவதற்கு ஊடுபயிராக வேர்க்கடலையை பயிர் செய்துள்ளனர். TIST–ன் பயிற்சிக் கூட்டம் மற்றும் கணுக்கூட்டங்களில் கலந்து கொண்டு சிறந்த, புதிய பயிற்சி முறைகளை கடைபிடித்து மரங்களை வளர்த்து வருகின்றனர். இவர்கள் இயற்கை உரம் பயன்படுத்துவது மட்டுமில்லாமல், ஜனப்பை செடியை வளர்த்து அச்செடிகள் மூன்றில் இருந்து நான்கு அடி உயரத்தில் இருக்கும் போது அச்செடிகளோடு சேர்த்து உழவு செய்து அதன் பிறகு பயிர் செய்வது இக்குழு உறுப்பினர்களின் வழக்கமாகும். ஜனப்பை செடியானது மண்ணில் கலந்து மக்கும்போது மண்ணுக்கு நல்ல ஊட்டச்சக்தியை கொடுக்கும் என்று இக்குழு உறுப்பினர்கள் கூறுகின்றனர். இச்சிறுகுழு உறுப்பினர்கள் கிராமத்தில் உள்ள மற்ற விவசாயிகளிடமும் மரம் வளர்ப்பின் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றனர்.

## மண்வளத்தை மேம்படுத்துதல்

நல்ல மகசூல் கிடைக்க வேண்டும் என்றால் மரங்கள் மற்றும் செடிகளுக்கு நல்ல தரமான மண் இருக்க வேண்டும். இயற்கை உரமான மாட்டுச்சாணத்தை பயன்படுத்தி மண்வளத்தை கூட்ட முயற்சி செய்யுங்கள், இம்முறையில் கடினமான மண்வகைகளிலும் நீர் கசிவும் மற்றும் காற்றோட்டம் இருப்பதற்க்கு இயற்கை உரமானது உதவும். அதே நேரத்தில் மண்ணின் ஈரத்தன்மையும் காக்கும். விலங்குகளின் உரம், பச்சை செடிபொருட்கள், மண்புழு உரம் மற்றும் மரங்களின் காய்ந்த இலைகள் கொண்டு மண்ணின் தன்மையை கூட்டலாம். உழவு செய்து மண்ணை பிரட்டி அதன் மேல் எளிதில் மக்க கூடிய இயற்கை பொருட்களை போடுவது நல்ல ஒரு முறையாகும். எளிதில் மக்காத பொருட்களை பயன்படுத்த வேண்டாம். இரசாயண உரங்களையும் பயன்படுத்த வேண்டாம். இராசாயண உரத்தில் உள்ள இராசாயணம் உங்கள் நிலத்தில் உள்ள மண் வளத்தை அழித்துவிடும். மேலும் மழைக்காலங்களில் உங்கள் நிலத்தில் உள்ள இராசாயணப் பொருட்கள் தண்ணீர் கால்வாய் வழியாக அருகில் உள்ள உங்களது நண்பர்களின் நிலத்திற்கு சென்று அவர்களது நிலத்தில் உள்ள மண்வளத்தையும் அழித்துவிடும்.

## Improve the soil condition

To get good yield from plants and trees the soil condition should be very good. Use the natural manure cowdung and increase the quality of the soil. The natural manure helps to maintain wetness in the soil and also provide good air circulation. Cowdung, green shrubs, earthworm manure and dried leaves can be used as mulch for improving the soil condition. Applying natural manure after ploughing the soil is a best practice to nourish the soil. Do not use hard materials which takes long time period to decompose. Also, do not use chemical fertilizers which will destroy the available nourishment in the soil. If you use chemical fertilizer for your groves, during rainy season, they get washed through drainage to your neighbours grove and quality of their land soil will also gets destroyed.

## டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீ இடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.